# DEPOSITION OF WITNESS

## ADDITIONAL LABOUR COURT, COIMBATORE.

| | |
|---|---|
| **வழக்கு எண்** | I D.OP.No. 44/2023 |
| **நாள்** | 10-02-2025 |
| **சாட்சி** | MW -1- S.ராமசாமி |

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** : -

மனுதாரர் ஈஸ்வரன் தொடர்ந்து ரெண்டு மாதங்களுக்கு மேல் வேலைக்கு வரவில்லை என்பது முக்கிய குற்றச்சாட்டு ஆகும். Ex.M.40 அடிப்படையில் தான் குற்றச்சாட்டு குறிப்புகளை கருத்தில் கொண்டு நிர்வாகம் மனுதாரர் மீது உள்ளக விசாரணை நடத்தியது. மனுதாரர் 19-5-2021 முதல் பணிக்கு வரவில்லை என்பது குற்றச்சாட்டாக உள்ளது. மனுதாரர் அவ்விதம் பணிக்கு வரவில்லை என்பது ஆவணங்களின் வாயிலாக எனக்கு தெரியும். எங்கள் நிர்வாகத்தில் விடுப்பு விதிகள் உண்டு. விதிகளின் துணை விதிகளில் அவை துலங்கும். பொதுவாக விடுப்பு

விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கும் போது சம்பந்தப்பட்ட ஊழியர் விடுப்பு எடுக்கும் முன்பே விடுப்பு வழங்கப்பட்டதா அல்லது விடுப்பு மறுக்கப்பட்டதா என்ற விவரத்தை அவருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று துணை விதிகளில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் .

**என்னிடம் காட்டப்படும் கடிதம் மனுதாரர் செயலாளருக்கு விடுப்பு சம்பந்தமாக 18.5.2021 இல் வழங்கிய கடிதம் என்றால் சரிதான் அந்த கடிதம் Ex.W1 ஆகும்.**

**மீண்டும் விடுப்பு நீட்டிப்பு கேட்டு மனுதாரர் செயலாளருக்கு கடந்த 27.05.2021 இல் எழுதிய கடித நகல் Ex.W2 ஆகும்.**

மேற்சொன்ன கடிதங்களின் அடிப்படையில் விடுப்பு வழங்கப்பட்டதா அல்லது விடுப்பு அனுமதிக்கப்பட்டதா என்பதை குறித்து தகவல் தெரிவிக்கும் கடிதங்கள் எதுவும் நிர்வாகத்தால் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கடிதங்களை மனுதாரர் காலதாமதமாக தான் பொதுவாக அனுப்பி வைத்து வந்தார். மனுதாரர் முதலில் சூடாமணி பொள்ளாச்சி மொத்த விற்பனை கூட்டுறவு பண்டக சாலையில் விற்பனையாளராக பணி பெற்றார். பின்னர் மாவட்ட ஆட்சியரின்

உத்தரவின் அடிப்படையில் அங்கிருந்து எங்களது சொசைட்டிக்கு பணி மாறுதலில் வந்தார். மனுதாரரர் அதன்பின் அலுவலக உதவியாளர், எழுத்தர் மற்றும் முதுநிலை எழுத்தர் ஆகிய பதவி உயர்வுகளைப் பெற்றார் என்றால் சரிதான். மனுதாரரர் பட்டப்படிப்பு படித்துள்ளார் என்பதற்கான பதிவுகள் அவரது பணி பதிவேட்டில் துலங்கும். ஆனால் அதற்குரிய சான்றிதழ் அசல்கள் அங்கு இல்லை. பொதுவாக சான்றிதழ்கள் இல்லாமல் மேற்படி பதிவுகளை பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள முடியாது என்றால் சரிதான். மனுதாரரர் தந்ததாக சொல்லப்படும் மன்னிப்பு கடிதங்களை நிர்வாகம் ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் கண்ட பாரா 4 ன்படி மனுதாரரர் ஒருபோதும் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடவில்லை என்றும், அவர் ஒருபோதும் நிர்வாகத்துக்கு மன்னிப்பு கடிதம் கொடுக்கவில்லை என்றும், நிர்வாகம் மன்னிப்பை ஏற்று அவரை எச்சரித்து விடவில்லை என்றும் இவை அனைத்தும் வழக்கிற்கான கட்டுக்கதை என்று சொன்னால் சரி அல்ல. எங்களது சங்கத்தில் மனோன்மணி என்பவர் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவர் முறையாக வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட முறையான நியமனதாரர் கிடையாது என்றால் சரிதான். முறையற்ற

நியமனங்களை முறைப்படுத்துதல் கூடாது என்று உச்ச நீதிமன்றம் முன்பே தீர்ப்பு வழங்கி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Ex.M3 ன் அடிப்படையில் எங்களது நிர்வாக குழு மனுதாரருக்கு பதவி உயர்வு வழங்க பரிந்துரை செய்துள்ளது என்று சொன்னால் சரிதான் ஆனால் அதை மாவட்ட பதிவாளர் ஏற்றுக்கொள்ளவில்லை. 2007 இல் பிறப்பிக்கப்பட்ட அதே தீர்மானத்தில் இரண்டாவது வரிசையில் மனோன்மணி பணி நிரந்தரப்படுத்துவதற்கான தீர்மானம் முன் தேதி இட்டு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி தீர்மானங்களுக்கு எதிராக மனோன்மணி தனக்கு முதுநிலை எழுத்தர் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறி ஆட்சேபனை கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2011 ஆம் ஆண்டில்தான் மனோன்மணி முதல் முதலாக தனக்கு முதுநிலை எழுத்தர் பதவி வேண்டும் என்ற கோரிக்கை வைத்தார் என்றால் சரிதான். அச்சமயத்தில் தான் துணைப்பதிவாளர் அவர்கள் பிறப்பித்த **Ex.M4** உத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த முதுநிலை எழுத்தர் பதவி உயர்வு ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். அதனைத் தொடர்ந்து தனி அலுவலர் மேற்படி

உத்தரவை வழிமொழிந்து மனுதாரர் பதவி உயர்வை ரத்து செய்து **Ex.M5** உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவுக்கு எதிராக மனுதாரர் இணைபதிவாளர் முன்பு சீராய்வு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் அந்த உத்தரவு Ex.M6 ஆக உள்ளது. அதற்கு எதிராக மனுதாரர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவில் சென்னை உயர்நீதிமன்றம் அவருக்கு ஏற்கனவே இருந்த நிலை தொடர வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். முந்தைய உத்தரவுகளை தள்ளுபடி செய்து திருப்பூர் இணைப்பதிவாளர் மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் சரிதான் . Ex.M8 அடிப்படையில் திருப்பூர் இணைப்பதிவாளரும் மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார். அந்த உத்தரவை எதிர்த்து மனுதாரர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது. எனவே யார் முதுநிலை எழுத்தர் என்ற முடிவுக்கு நிர்வாகம் வர முடியாது என்றால் சரியில்லை கடைசியாக மாவட்ட இணைபதிவாளர் போட்ட உத்தரவு தான் அமலில் இருக்கும். Ex.M9 முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் மனுதாரர் மீது போடப்பட்ட குற்ற

வழக்கு என்னவாயிற்று என்பது எனக்கு தெரியாது. அந்த வழக்கு பொய் வழக்கு என்று தீர்மானிக்கப்பட்டு குற்றவியல் நீதிமன்றம் மனுதாரரை விடுதலை செய்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தின் பாரா 13 ல் கண்டுள்ள மனுதாரரின் மறுபரவல் பணியில் இருந்து தாய் சங்கத்திற்கு வந்த பின்னர் இரண்டு நாட்கள் பணிக்கு வரவில்லை என்பது ஆவணங்களின் வாயிலாக தெரிய வந்தது. அதற்கான சான்றாவணங்களை இவ்வழக்கின் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அவ்வாறு வேலைக்கு வராமல் இருக்கவில்லை என்றும் நான் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரி அல்ல. மனுதாரர் ஒரு விபத்தில் பாதிக்கப்பட்டு 01-03-2011 முதல் 09-03-2011 வரை முறையாக ஈட்டிய விடுப்பு விண்ணப்பித்து அதையும் நிர்வாகம் வழங்கி உள்ளது என்று சொன்னால் அது பற்றிய விவரங்கள் தெரியாது. விடுப்பு கொடுத்தது உண்மைதான் விடுப்புக்கான காரணங்கள் பற்றி எனக்கு தெரியாது. 21-06-2011 முதல் 13-7-2011 வரை மீண்டும் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டது ஆனால் அதற்குரிய காரணங்கள் எனக்கு தெரியாது. பின்னர் 14-07-2011 முதல் 18-12-2011 வரை கூட்டுறவு கடன்

சங்கத்தில் மறுபரவல் முறையில் பணியமர்த்தப்பட்டார் என்றால் சரிதான். மனுதாரர் ஏன் அடிக்கடி பணி மாறுதலில் அலைகளிக்கப்பட்டார் என்றால் அது மனுதாரரின் சுய விருப்பத்தின் பேரில் போடப்பட்ட உத்தரவுகளாகும். மனுதாரர் இணைப்பதிவாளரிடம் விண்ணப்பங்கள் கொடுத்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மனோன்மணியின் பதவி உயர்வுக்கு உதவி செய்வதற்காகவே மனுதாரரை தாய் சங்கத்திலிருந்து வெளியேற்றி மறு பரவல் முறையில் பல்வேறு சங்கங்களில் பணியமர்த்தி கஷ்டப்படுத்தினோம் என்றால் சரியல்ல. குற்ற வழக்கு நிலுவையில் இருப்பதை காரணம் காட்டி நிர்வாகம் 6 மாத ஊதிய நிறுத்தம் மற்றும் பணி இடைநீக்க காலத்தை ஈட்டிய விடுப்பில் கழித்து உத்தரவிட்டதை சரியல்ல என்று தீர்மானித்து மாவட்ட இணைப்பதிவாளர் உத்தரவு பிறப்பித்து இருந்தார் என்று சொன்னால் சரிதான். அதனைத் தொடர்ந்து மனுதாரர் வழக்கறிஞர் கூட்டுறவு சங்கத்திற்கு மறுபரவல் முறையில் பணி மாறுதல் செய்யப்பட்டார் என்றால் சரிதான். அங்கு பணியாற்றிய போது மனுதாரர் 45 நாட்கள் அனுமதிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு தான் எடுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அங்கு ஆள் பற்றாக்குறை இருந்தது என்று எந்தவித கோரிக்கையும் வழக்கறிஞர் சங்கம் முன் வைக்கவில்லை என்று

சொன்னால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 19 இல் கண்டுள்ளபடி மனுதாரர் துணைப்பதிவாளர் மற்றும் அமைச்சரை பார்க்க போனதற்காக முறையாக தலைவரிடம் அனுமதி வாங்கவில்லை என்கிற வகைக்கு நிர்வாகம் காரணம் கோரும் அறிவிப்பு ஏதும் மனுதாரருக்கு வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான். Ex.M10 ன் அடிப்படையில் மற்ற பணியாளர்களும் நகர்வு பதிவேட்டில் கையொப்பமிட்டு அனுமதி வாங்கிச் சென்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். பாரா 20 ல் கண்டுள்ளபடி மனுதாரர் தாய் சங்கத்திலும் மறுபரவல் சங்கத்திலும் என இரண்டு இடங்களிலும் சம்பளம் வாங்கியதாக அவருக்கு காரணம் கோரும் அறிவிப்பு ஏதும் வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவை தணிக்கை அறிக்கையில் துலங்கும். மனுதாரர் ஒருபோதும் ரெண்டு சம்பளம் வாங்கவில்லை என்றும் நிர்வாகம் எனவேதான் இது குறித்து விளக்கம் பெற்று அவர் மீது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரி அல்ல. மனுதாரர் உரிய மருத்துவ காரணங்களுக்காக தகுந்த மருத்துவசான்றின் அடிப்படையில் தான் விடுப்பில் இருந்தார் என்றும் அந்த விடுப்பை நிர்வாகம் வழங்கி உள்ளது என்றால் அனுமதிக்கப்பட்ட விடுப்பு மற்றும் சம்பள இழப்பு விடுப்பு

இரண்டையும் நிர்வாகம் வழங்க நேரிட்டது. மனுதாரர் பொய் காரணங்கள் சொல்லி விடுப்பு கோருகிறார் என்று விடுப்பு நிராகரிக்கவும் மனுதாரர் மீது அப்போது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். Ex.M12 இன் அடிப்படையில் மனுதாரருக்கு 01-07-2013 முதல் 23-10-2014 வரை அரைசம்பளம் வழங்கி வந்தோம் என்றால் சரிதான்.

**மனுதாரரின் பணியிடை நீக்கத்தை தவறு என்று சொல்லி மாவட்ட சங்கங்களில் இணைப்பதிவாளர் போட்ட சீராய்வுமனு உத்தரவு இதுதான் அந்த சீராய்வு மனு உத்தரவு Ex.W3 ஆகும்.**

அந்த உத்தரவின் அடிப்படையில் நிர்வாகம் மனுதாரருக்கு முழு சம்பளத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதுவாக மனுதாரர் இந்நீதிமன்றத்தில் கணக்கீட்டு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் .

**அந்த கணக்கீட்டு மனு உத்தரவு நகல் Ex.W 4 ஆகும்.**

அந்த கணக்கீட்டு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தான் நிர்வாகம் இணை பதிவாளர் உத்தரவுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்திற்கு போனது என்றால் தேதி ஞாபகம் இல்லை . போனது உண்மைதான்.

**மனுதாரர் முதுகலை பட்டப்படிப்பு முடித்துள்ளார் என்பதை உறுதி செய்து அவரது பணிப்பதிவேட்டில் அதற்கான பதிவுகளை மேற்கொண்டு ஊதிய உயர்வு வழங்கியது என்று சொன்னால் சரிதான். அதற்கான பணிப்பதிவேடு பக்கம் 32 இல் கண்ட பதிவு Ex.W5 ஆகும்.**

மனுதாரர் முறையாக ஆவணங்களை கொடுத்து பதிவுகளை மேற்கொண்டு சம்பள உயர்வு வாங்கினார் என்றும் தலைவர் தான் உள்நோக்கத்துடன் மனோன்மணிக்கு உதவி செய்வதற்காக மனுதாரரை பழிவாங்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல . ஏற்கனவே ஆவணங்களை வாங்கி பணி பதிவேட்டின் முறையான பதிவுகள் செய்யப்பட்டு விட்ட நிலையில் ஆவணங்கள் வழங்கவில்லை என்று பொய் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இருப்பில் போதிய விடுப்பு இருந்து வந்தது என்றும் அதைத்தான் அவர் எடுத்தார் என்றும் அதைத்தான் நிர்வாகமும் அவருக்கு வழங்கியது என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் அனுமதி இல்லாமல் விடுப்பு எடுத்தார் என்கிற வகைக்கு காரணம் கோரும் அறிவிப்பு ஏதும் வழங்கவில்லை என்று சொன்னால் சரி தான் .

01-06-2016 முதல் 12.6.2017 வரை மனுதாரர் பணிக்கு வரவில்லை. மனுதாரர் ஏன் பணிக்கு வரவில்லை என்கிற வகைக்கு நிர்வாகம் காரணம் கோரும் அறிவிப்பு ஏதும் வழங்கவில்லை என்றால் மனுதாரர் விடுப்பு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அந்த விடுப்பு விண்ணப்பம் அனுமதிக்கப்படவில்லை என்றும் மனுதாரர் உடனடியாக பணியில் சேர வேண்டும் என்றும் கூறி நிர்வாகம் அவருக்கு அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. மேற்படி காலகட்டத்தில் நிர்வாகம் தனக்கு பிழைப்பூதியம் வழங்கவில்லை என்ற கோரிக்கை வைத்து பிழைபூதியத்திற்கான ஆணையரிடம் மனுதாரர் மனு தாக்கல் செய்து நிலுவையில் இன்றும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். நிர்வாகம் பணி மறுப்பு செய்ததால் தான் இன்று வரை வழக்கை நடத்தாமல் அவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல .

**இரு தரப்பையும் விசாரித்து இணைப்பதிவாளர் மனுதாரருக்கு உடனடியாக பணி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும்**

**இணைப்பதிவாளர் அவர்களின் 11. 6. 2018 தேதியிட்ட உத்தரவு Ex.W 6 ஆகும்.**

அதை மதித்து நிர்வாகம் உடனடியாக அவருக்கு வேலை கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் தனக்கான கடமையும் பொறுப்பும் என்னென்ன என்று கேட்டு, தனக்கு வேலை வேண்டும் என்றும் கேட்டு நிர்வாகத்திற்கு கடிதம் எழுதினார் என்றால் சரியல்ல. மனுதாரர் தொடர்ந்து வேலை கேட்டு பல்வேறு கடிதங்கள் எழுதியும் நிர்வாகம் அவருக்கு பணி வழங்க முன் வராததால் இணைபதிவாளர் மாவட்ட சத்துணவு பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன கடன் சங்கத்தில் பணி செய்ய உத்தரவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் சுய விருப்பத்தின் பெயரில் தான் அங்கு பணியில் சேர்ந்தார். மனுதாரர் சுய விருப்பத்தில் தான் அங்கு பணியில் சேர்ந்தார் என்பதை காட்ட எங்களிடம் சான்றாவனங்கள் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் 27 ஜனவரி 2021 வரை அங்கு வேலை பார்த்து வந்தார். பின்னர் அங்கிருந்து இணைப்பதிவாளர் உத்தரவின் பேரில் மறு பரவல் முறையில் அழகப்ப கவுண்டனூர் சங்கத்துக்கு பணி மாறுதல் செய்யப்பட்டார். அந்த உத்தரவு நகல் நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கு போதிய நிதி வசதி

இல்லாத காரணத்தினால் தனிப்பதிவாளர் மேற்படி மறுபரவல் பணியிட மாறுதல் உத்தரவை ரத்து செய்துவிட்டார். அந்த உத்தரவின் தொடர்ச்சியாக தாய் சங்கம் தான் மனுதாரரை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் சரிதான். 06 மே 2021 இல் மனுதாரர் தாய் சங்கத்தில் பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். 18 மே 2021 வரை மனுதாரர் தொடர்ச்சியாக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அந்த காலகட்டமானது கொரோனா பொது முடக்க காலகட்டமாகும். அப்போது பேருந்துகள் இயக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் மேற்படி காலகட்டத்தில் கோயம்புத்தூர் ராமநாதபுரத்தில் வசித்து வந்தார் என்றால் ஆவணங்களின்படி அவ்வாறு உள்ளது. மனுதாரர் தனது வீட்டில் இருந்து சங்கத்திற்கு வேலைக்கு வருவதற்கு 60 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டும்.

பொதுப்பணி போக்குவரத்து இல்லாததால் மனுதாரர் பணிக்கு வர முடியவில்லை என்றும், மனுதாரரின் வீட்டு பகுதி குவாரண்டைன் உத்தரவால் பாதிக்கப்பட்டதால் அவர் வேலைக்கு வர முடியாமல் போனது என்று சொன்னால் சரியல்ல. சங்க துணை விதிகளின்படி மனுதாரர் தலைமை இடத்தில் வசித்து தான் வேலை பார்க்க வேண்டும் அதை அவர்

மீறி உள்ளார். அவ்வாறு துணை விதிகளை மீறிவிட்டார் என்று சொல்லி மனுதாரருக்கு காரணம் கோரும் அறிவிப்பு கொடுக்கவில்லை குற்றச்சாட்டும் வனையவில்லை. எனது வசிப்பிடம் கோயம்புத்தூர் மாவட்டம் செஞ்சேரி மலையில் உள்ளது. ஆனால் நான் அறை எடுத்து பணியிடத்தில் தங்கியுள்ளேன். எனது வீட்டிற்கும் பணியிடத்திற்கும் 60 கிலோமீட்டர் தூரம் உள்ளது .நான் தலைமை இடத்தில் தங்கி வேலை செய்கிறேன் என்பதை காட்ட ஆதாரம் போடவில்லை. நான் செஞ்சேரி மலையில் இருந்து தான் வேலைக்கு போய் வருகிறேன் என்றும், வழக்குக்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் நாகம்மாள் என்ற சக ஊழியர் கோவிட் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார் என்றால் சரிதான். வேறு எந்தெந்த ஊழியர்களுக்கு கோவிட் வந்தது என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வருகை பதிவேடு பணியாளர்களுக்கானது அதில் விற்பனையாளர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கான வருகை பதிவேடு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் அவை தனியாக உள்ளது. தலைமையிடமும் விற்பனையகமும் தனி தனியா உள்ளன என்றால் சரிதான். விற்பனை இடத்தில் வேலை செய்த நாகம்மாளுக்குத்தான்

கோவிட் வந்தது என்றால் சரிதான். மனுதாரர் வேலை பார்த்த விற்பனையகம் எங்கள் அலுவலகத்துக்கு அருகாமையில் தான் இருந்தது. மனுதாரர் பொதுவாக எங்கள் அலுவலகத்தில் இருப்பார் விற்பனை வந்தால் மட்டும் குடோனுக்கு போய்விட்டு வருவார். நாகம்மாள் விற்பனை இடத்தில் தான் வேலை பார்த்து வந்தார். அவ்வப்போது அலுவலகத்திற்கு வந்து பணத்தை கட்டி விட்டு செல்வார். நாகம்மாள் இறந்து போனதால் விற்பனையகம் சீல் வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். விற்பனையாளர் சண்முகப்பிரியாவுக்கும் கோவிட் பெருந்தொற்று ஏற்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விற்பனையாளர்கள் வருகை பதிவேட்டை பார்வையிட்டால் அவர்கள் எதனால் வரவில்லை என்றும் என்ன விடுப்பு வழங்கப்பட்டது என்றும் தெரியவரும் என்றால் சரிதான். நாகம்மாள் பெருந்தொற்று காலகட்டத்தில் இறந்து போனதால் விற்பனையகம் முழுவதுமாக சீல் வைக்கப்பட்டுவிட்ட நிலையில் மனுதாரரும் வேலைக்கு வர முடியாமல் போயிட்டு என்று சொன்னால் சரியல்ல. விடுப்பு முடிந்த நிலையில் மனுதாரர் தொடர்ச்சியாக வேலைக்கு வந்து சென்றார் என்றால் சரி அல்ல. இச்சங்கதிகளை மறைக்கவே விற்பனையாளர் வருகை பதிவேட்டை வழக்கில் மறைத்து விட்டோம்

என்றால் சரியல்ல. செய்தித்தாளில் கண்டுள்ள மேரி கலா விவகாரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி விவரங்களைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளாமல் சங்கத் தலைவர் மனுதாரரை வேலை நீக்கம் செய்தார் என்றால் சரியில்ல. வேலை நீக்கம் செய்தது உண்மைதான். மேற்படி வேலை நீக்கத்தை ரத்து செய்து இணைப்பதிவாளர் மறு விசாரணைக்கு உத்தரவிட்டார் என்றால் சரிதான். நிர்வாகம் முறையான வாய்ப்பு வழங்காமல் சட்ட விரோதமாக உள்ளக விசாரணை நடத்தியது என்று சொன்னால் சரியில்லை. மனுதாரர் அனுப்பிய விடுப்பு விண்ணப்பங்களை வாங்கி வைத்துக் கொண்டு அவற்றில் முறையான உத்தரவு பிறப்பிக்காமல் அவருக்கு விடுப்பும் வழங்காமல் அவரைக் கஷ்டப்படுத்தினோம் என்றால் சரியல்ல. மனுதாரர் தான் பதவி மூப்பில் உயர்ந்தவர் என்றும் மனோன்மணி தான் சங்கச் செயலாளராக தொடர்ந்து பொறுப்பில் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரிதான். அவ்வாறு பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் மனுதாரர் வேண்டுமென்றே மறுபரவல் முறையில் வெளியே அனுப்பப்பட்டார் என்றும் தாய் சங்கத்தில் இருந்த காலகட்டத்திலும் மனோன்மணிக்கு கீழ் தான் பணியாற்றி வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் பதவி உயர்வுக்கு முழு தகுதி

பெற்றிருந்த பின்னர் கூட அவருக்கு உரிய பதவியை வழங்காமல் இளநிலை பதிவிலேயே வைத்து அவரை துன்புறுத்தி வந்தது என்று சொன்னால் சரி அல்ல. Ex.M40 ன் அடிப்படையில் குற்றச்சாட்டுகள் அனைத்துமே அடிப்படை ஆதாரம் அற்றவை என்றும் அதன் அடிப்படையில் நிர்வாகம் எடுத்த நடவடிக்கை முற்றிலும் சட்ட விரோதமானது என்று சொன்னால் சரி அல்ல. மனுதாரருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே தலைவரும் மனோன்மணியும் கூட்டு சேர்ந்து அவரை பழி வாங்கிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வேலைக்கு உத்தரவிட்டது சட்ட விரோதமானது என்பதால் மனுதாரர் மனுவில் கோரி உள்ள கோரிக்கைகள் அனைத்தும் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்கு மூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு முற்றிலும் தெரியாதவை அல்லது தவறானவை என்று சொன்னால் சரியல்ல. மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரி அல்ல.

**மறுவிசாரணை - இல்லை**